திரு. வி. கே. கோதண்டராமன் : ஆற்றுத் தண்ணீர், அணைத் தண்ணீர் இவற்றிலே நல்ல அருமையான வண்டல் உரச் சத்து டைய தண்ணீர் கிடைக்கிறது. அப்படிப்பட்ட தண்ணீருக்கு மாத்திரம் சலுகை அளித்து, உரமும் போட்டு, கிணறு வெட்டி, பம்ப் செட் வைத்து, மின்சாரக் கட்டணம் கட்டி விவசாயம் செய் பவர்களுக்கு இந்த அளவிற்குச் சலுகை இல்லை என்று சொன்னால், அந்த விவசாயிக்கு உணவு உற்பத்தி செய்யவேண்டும் என்பதில் உற்சாகம் குறையுமல்லவா? ஆகவே, அதற்காகவேண்டி, தயவு செய்து, கண்டிப்பாக, ஏதாவது சலுகை கொடுப்பதற்கு இனி மேலாவது ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மின்சாரத் துறை பற்றிய கேள்விக்கும் கனம் உறுப்பினருடைய துணைக் கேள்விக்கும் தொடர்பில்லை. ஆனால், மற்ற மாவட்டங்களைப் பொறுத்த வரையில், புஞ்சை நிலங்களுக்கு வரி இல்லை என்ற சலுகை இருந்துகொண் டிருக்கிறது. பாடுபடுகிற தன்மைக்கேற்ப, வேறு வகையிலே சலுகை கேட்டுப் பெற வேண்டுமே தவிர, மின்சார வகையிலே கேட்டுப் பெறுவதற்கில்லை.

குடியாத்தம் கல்லூரி

*477 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாநில எல்லையில், ஆந்திரா எல்லையை ஒட்டி அமைந்துள்ள குடியாததம தாலுக்காவில் தெலுங்கு படித்து எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செயயும் மாணவர்களின் சௌகரியத்தை முன்னிட்டு நடப்பு ஆண்டில் குடியாத்தம் கல்லூரியில் தெலுங்கு செக்ஷன் ஒன்று ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம்; புதிய வகுப் புகள் 1967-68-ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திரு. வி. கே. கோதண்டராமன் : குடியாத்தம் கல்லூரியில் இப்பொழுது தெலுங்கு படித்த மாணவர்களைச் சேர்ப்பது கிடை யாது. அவர்கள் தெலுங்கு படிக்கவேண்டுமானால், சென்னையில் உள்ள கல்லூரியில் இடம் கிடைத்தால்தான் தெலுங்கு படிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, தெலுங்கு மாணவர்களுக்காக வேண்டி அங்கே ஒரு தனியான வகுப்பு உடனடியாக ஆரம்பிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் சொன்னபடி, 1967-68-ல் புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது பாடமாக வேண்டுமானால் தெலுங்கு மாணவர்கள் தெலுங்கைப் படிக்க இடம் தரப்படுகிறது. ஆனால், 'மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷன்' என்ற தன்மை வரவில்லை. மீடியம் ஆப் இன்ஸ்ட் ரக்ஷன் தமிழாகத்தான் இருக்கமுடியுமே தவிர, தெலுங்கு இருக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1967 நவம்பர் 28]

கக்கூடிய தன்மை உருவாவதற்கான வழிகள் ஏற்பட முடியாது. இரண்டாவது மொழியாகத் தெலுங்கைத் தங்கள் தாய்மொழியாக எடுத்துப் படிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. கே. விநாயகம்: நமது மாநிலத்திலுள்ள தெலுங்கு மொழி பேசக்கூடிய சிறுபான்மையினருக்குச் சலுகை அளிக்கும் வகையில், தெலுங்கு மக்கள் கல்லூரியில் தெலுங்கைப் பாடமாக நாம் வைத்திருக்கிறோம். அதேமாதிரி, நம் தமிழர்கள் ஆந்திர மாநிலத்தின் ஓரத்தில் வாழ்கிறார்களே, அவர்கள் தமிழிலே படிக்க வகை செய்யவேண்டும். திருப்பதி யூனிவர்சிடியில் படிக்க விரும்புகிறவர்களுக்காவது அந்த வசதியைச் செய்துதரவேண்டும். நாங்கள் உங்கள் மக்களுக்கு இவ்வளவு சலுகைகளைத் தந்திருக்கிறோமே, எங்கள் மக்களுக்கும் தமிழில் படிக்க வசதி செய்து தர முடியுமா என்று ஆந்திர சர்க்காருக்கு, குறிப்பாகத் திருப்பதி யூனிவர்சிடி அதாரிடீஸ்ஸுக்கு நம்முடைய சர்க்கார் எடுத்துச்சொல்லி வகை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று, அந்தச் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டித் தெரிவிப்பார்களானால், அன்பு முறையிலே அவர்களுக்குத் தெரிவித்து, அந்த நிலைமைகளை உருவாக்க வழி ஏற்படும்.

திரு. கே. விநாயகம்: இதுவரையிலும் திருப்பதி யூனிவர்சிடியில் தமிழ் படிப்பதற்கு தமிழ் மாணவர்களுக்கு வசதி செய்து தந்திருந்தார்கள். இப்பொழுது நான்கு ஆண்டுகளாகத்தான் ஏற்கெனவே இருந்த தமிழ் வகுப்புகளையெல்லாம் ரத்து செய்துவிட்டு, அங்கிருக்கும் தமிழர்களும் தெலுங்குதான் படிக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்திருந்தாலும், தெரிந்திரா விட்டாலும், திரும்பவும் தமிழை அங்கே போதிப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்து தருவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: எனக்கு விவரம் தெரியவில்லை. விவரம் தெரிந்தவுடன் அதுபற்றி நான், அன்பு முறையில் அணுகி, செய்ய வேண்டிய முயற்சிகளுக்குத் தக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, in the month of July I received a copy of a memorandum submitted to the Hon. Minister for Education by the residents of Purasawalkam and other areas of the City, that admission to Telugu students was refused in the Sir M. Ct. Muthiah Chettiar High School, in Purasawalkam. Will the Hon. Minister be pleased to state the steps taken to remove that difficulty?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, திருப்பதியிலே இருக்கக்கூடிய கல்லூரியிலே கனம் அமைச்சர் அவர்கள் முயற்சி செய்து அந்த மாணவர்களைச் சேர்ப்பதற்கு முன்னாலே, சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிற மாணவர்கள், தமிழ்நாட்டிலே இருந்து வந்தவர்கள் என்ற காரணத்திற்காக வேண்டி, அவர்களுக்கு ஸ்காலர்ஷிப்போ, மற்றக் கல்விச் சலுகைகளோ கொடுக்க மறுக்கப்படுகிறது. ஆகவே, குடியாத்தம் கல்லூரியிலே இரண்டு மூன்று அல்லது நான்கு ஐந்து வருஷ காலத்திற்கு வரைக்கு மாவது டெம்பரரியாக ஒரு தெலுங்கு செக்ஷன் ஆரம்பிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாணவர்கள் தெலுங்கு மொழி எடுத்துப் படிப்பதற்கு வேண்டிய வழிவகைகளை அரசாங்கம் செய்யும். ஆனால் மீடியம் ஆஃப் இன்ஸ்ட்ரக்ஷனாக தெலுங்கு மொழியை எடுத்து நடத்த வழி இல்லை.

தூத்துக்குடி இல்லத்தார் வாலிபர் சங்க உயர்நிலைப்பள்ளி

* 478 வினா.—**திரு. மு. ச. சிவசாமி :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தூத்துக்குடி இல்லத்தார் வாலிபர் சங்க உயர்நிலைப் பள்ளியின் அங்கீகாரத்தை 8—2—1967-ம் நாள் Fort St. George கெஜட்டில் வாபஸ் பெற்றிருக்க, மார்ச் மாதம் வரை S.S.L.C. பரீட்சைப் பணம் கட்டாதிருந்தும், நான்கு மாணவர்களுக்கு பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டது ஏன் ?

(இ) 1966-ல் மேற்படி பள்ளியில் S.S.L.C. பரிட்சை எழுதிய மாணவர்களில், இன்றுவரை எத்தனை மாணவர்களுக்கு சர்டிபிகேட் கொடுக்கப்படவில்லை ?

(உ) கொடுக்கப்படாததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இம்மாணவர்களுக்கு இடர்ப்பாடு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, 1967 மார்ச் திங்களில் நடைபெற்ற பள்ளி இறுதித் தேர்வில் தேர்வு எழுத, தனித்த முறையில் இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதற்கான தேர்வுக் கட்டணம் கருவூலத்தில் ஏற்கெனவே செலுத்தப்பட்டு விட்டது.

(இ) தூத்துக்குடி, இல்லத்தார் வாலிபர் சங்க உயர்நிலைப் பள்ளியிலிருந்து எந்த மாணவரும் 1966, மார்ச் திங்களில் இப்பள்ளி மூலம் தேர்வு எழுதவில்லை.

(உ) இக்கேள்வி எழவில்லை.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, அரசினர் அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றபின்பும், அந்தப் பள்ளியை நடத்துவதால் அரசுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் சிரமம்